www.tamilarangam.net

# நான்காம் அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக்கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம்.

## சிறிலங்காவின் அரசியல் நிலமைகளும்,புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் பணிகளும்.

மத்திய கிழக்கில் ஈராக்கினை சுட்டுப் பொசுக்கி பல்லாயிரக்கணக்கான மக்களை கொன்று குவித்த ஏகாதிபத்திய யுத்தமானது உலக முதலாளித்துவ நெருக்கடியின் எந்தவொரு பிரச்சனையையும் தீர்க்கவில்லை மாறுக ஏகாதிபத்திய நெருக்கடியை சர்வதேசரீதியில் உக்கிர மாக்கியுள்ளது.

இந்த நெருக்கடியில் அமிழ்ந்து விட்ட முதலாளித்துவ பிரேமதாசா அரசானது தனது ஆட்சியை காப்பற்றுவதற்காக இரு முனையிலான காட்டுமிராண்டி யுத்தத்தைதீவு முழுவதும் தீவிரமாக்கியுள்ளது. வடகிழக்கில் தமிழ் மக்கள் மேல் இரத்தம் தோய்ந்த இனவாத போரினைத்தொடுத்து ஆயிரக்கணக்கில் தமிழ் மக்களைகொன்றெழிக்கும் அதே வேளையில் தென்னிலங்கையில் ஒடுக்கப்பட்ட கிராமப்புற விவசாய இளைஞர்கள்மேலான கொலைப்படைகளின் தாக்குதல்களை தீவிரப்படுத்தி உள்ளதுடன் தொழிலாளவர்க்கத்தின் மீதான கொடிய தாக்குதல்களையும் இணைத்துக்கொண்டது.

சிறிலங்காவின் ஏனைய தொழிலாளவர்க்ககட்சிகளான LSSP, CP, NSSP, CWC துரோகத்தலைமைகள் பிரேமதாசா அரசின் இந்த படு கொலை யுத்தங்களுக்கு பரிபூரண ஆதரவு வழங்கும் அதே வேளையில் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைமையானது, போராளிகளின் தொடர்ந்த இராணுவவெற்றிகளுக்கு மத்தியிலும் மீண்டும், மீண்டும் பிரேமதாசா ஆட்சியுடன் பேச்சு வார்த்தைக்கு சம்மதம் தெரிவிப்பதன் மூலம் தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு முழுத்துரோகம் செய்வதுடன் தங்களது குட்டிமுதலாளித்துவவேலைத்திட்டத்தின் கையாலாகாத்தன்மையையும் வெளிப்படுத்துகின்றனர்.

ஏனைய குட்டி முதலாளித்துவ இயக்கங்களான, EPRLF, PLOT, ENDLF, EPDP போன்றவை அரசின் கூலிப்படைகளாக மாறி வடகிழக்கின் ஆக்கிரமிப்பு யுத்தத்தில் அரச இராணுவத்துடன் செயற்படுகின்றனர். இந்நிலையில் நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் இலங்கைக் கிளையான புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் மட்டுமே பிரேமதாசாவினுடைய ஏகாதிபத்திய சார்பு முதலாளித்துவ ஆட்சியைதூக்கிவீசுவதற்காக சிங்கள, தமிழ், தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டுவதற்காக போராடுகின்றது.

தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை நிபந்தனையின்றி அங்கீகரிக்கும் புரட்சிக் கம்யூனிஸ்ட் கழகம் பின் தங்கிய நாடுகளின் தீர்க்கப்படாத ஜனநாயகக் கடமைகளான தேசிய இனங்களின் சுயநிர்ணய உரிமை, நிலச்சீர்திருத்தங்கள் போன்றவற்றை நிறைவேற்றுவதற்கு பாட்டாளிவர்க்க சர்வாதிகாரம்தான் ஒரே வழி என்ற ரொக்சியின் நிரந்தரப்புரட்சி தத்துவத்தினை தனது வேலைத்திட்டத்தின் அடித்தளமாக கொண்டுள்ளது.

உலக சோசலிசப்புரட்சியின் ஒரு அங்கமாக தமிழீழ சிறீலங்கா சோசலிசகுடியரசை நிர்மாணிப்பதற்காக தமிழ், சிங்கள தொழிலாளர்களை சுயாதீனமாக அணிதிரட்டுவதே புரட்சிக்கம்யூனிஸ்ட் கழகத்தின் வேலைத்திட்டமாகும். இந்தப் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்டு நான்காவது அகிலத்தின் அனைத்துலகக்குழுவின் வேலைத்திட்டத்தினை அறிந்து அணிதிரளுமாறு அனைத்து தொழிலாளர்களிற்கும், தமிழ்மக்களுக்கும் அழைப்பு விடுக்கின்றோம்.

இடம் .... **A.G.E.C.A., 177 rue Charonne PARIS 75011**

காலம் ... 5.5.1991 [redacted] ஞாயிறு

நேரம் ... 15:00 **Metros : Charonne + Alexandre Dumas**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்